புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

தரம் 5

zoom
வகுப்புக்கள்

பிரிவு 1

மாதம்
1500/=

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
நுண்ணறிவு	தமிழ்	கணிதம்	நுண்ணறிவு	சுற்றாடல்	சிங்களம்	ஆங்கிலம்

சாலை 5.00 – 6.00

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ARM.SIMAAS

SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY

EXAMINATION GRADE FOUR STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES , MODEL - 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் நான்கு மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2021

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	


மொத்தப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	
	V/I/T/CH

www.ikeou.lk


- 01ம், 02ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள வட்டத்தினுள் உள்ள இரு உருக்களுடனும் தொடர்புடைய இன்னொரு உருவைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்த அதன் கீழ்க் கோடிடுக.

01.





(1)



(2)




(3)

02.






(1)



(2)



(3)

- கீழே தரப்பட்டுள்ள **A,B,C,D** என்ற அடைப்புக்களுள் தரப்பட்டுள்ளவற்றை அவதானித்து 03ம், 04ம் வினாக்களுக்கு விடை தருக.

A
போஞ்சி
பாரை
புறா
கரட்
சுறா
மயில்

B
சிங்கம்
அறுக்குளா
கத்தரி
யானை
சூரை
பயற்றை

C
மைனா
குரங்கு
பாகல்
கிளி
புடோல்
நரி

D
குதிரை
முரல்
காகம்
ஒட்டகம்
கணவாய்
குயில்

03. இந்த அடைப்புக்களிடையே இரண்டு வகை மீனினங்களைக் கொண்ட மூன்று அடைப்புக்களும் யாவை?

(1) A,B,C (2) A,B,D (3) B,C,D

04. இந்த அடைப்புக்களிடையே இரண்டு பறவைகளையும் இரண்டு மீன்களையும் கொண்டுள்ள இரண்டு அடைப்புக்களும் யாவை?

(1) A,C (2) A,D (3) B,D

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் திருத்தமாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) திருநாள் உழவர்களின் தைப்பொங்கல் ஆகும்.

(2) பொங்கலிட்டு தைப்பொங்கலை புத்தாடை அணிந்து கொண்டாடுவர்.

(3) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் திருநாள் தைப்பொங்கல் ஆகும்.

06. 2021ம் ஆண்டு பிறந்த ஒருவர் தொடர்பாகக் கூறக்கூடிய கூற்றுக்களுள் சரியானது எது?

(1) 20ஆம் நூற்றாண்டின் 2ம் தசாப்தத்தில் பிறந்தவராவார்.

(2) 21ஆம் நூற்றாண்டின் 3ம் தசாப்தத்தில் பிறந்தவராவார்.

(3) 20ஆம் நூற்றாண்டின் 2ம் தசாப்தத்தில் பிறந்தவராவார்.

[பக். 3 ஐப் பார்க்க.

www.ikeduJK

சுட்டெண் :.....

- இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகள் தரப்பட்டுள்ள வரிசையை அவதானித்து 07ம், 08ம் வினாக்களுக்கு விடை தருக.

0 = ★	9 = ⊙	4 = □	1 = ⌘

07. இக்குறியீடுகளைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண் யாது?

(1) ⌘★□⊙ (2) ⌘★⊙□ (3) ⌘□★⊙

08. கீழே தரப்பட்டுள்ள கூட்டல் செய்கையில் A,B எனும் இடைவெளிகளுக்கு வரவேண்டிய எண்கள் முறையே யாவை?


□★□⌘ + ⌘⊙★★ = A.....⊙□.....B

(1) 5,1 **(2) 4,1** **(3) 1,4**

09. 2020ம் ஆண்டு செவ்வாய்க்கிழமையில் ஆரம்பமாகியது எனின், 2021ம் ஆண்டு எந்த நாளில் ஆரம்பமாகும்?

(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை


10.



அருகில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 05 (2) 06 (3) 07

11. கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் ஊடுகாட்டும் தாள்கள் இரண்டில் வரையப்பட்டுள்ளன.



உரு 1



உரு 2

இரண்டு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு, ஒரு தாளின் மீது மற்றைய தாளை வைப்பதால் கிடைக்கும் உரு யாது?

(1)  (2)  (3) 

12. இங்கு தரப்பட்டுள்ள ஏழு இலக்கங்களையும் ஏறுவரிசைக்கு ஒழுங்குபடுத்துவதற்காக எத்தனை இலக்கங்களை இடம்மாற்றுதல் வேண்டும்?

1	3	7	4	5	2	6

(1) **03** (2) **04** (3) **05**

13.

1	2	3	6
3	6	12	3
4	8		5
3	1	5	5

இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்திற்குப் பொருத்தமான எண் யாது?

(1) **14** (2) **15** (3) **16**

[பக். 4 ஐப் பார்க்க.

www.lkedu.lk

14. 01 , 02 என்றவாறாக 50 வரையில் எண்களை எழுதும் போது பூச்சியம் எத்தனை தடவைகள் இடம்பெறும்?


(1) **07** (2) **13** (3) **14**

15. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?

எல்லையை அறிந்து அங்குமிங்கும் செல்வான்.
துன்பத்திலும் இன்பத்திலும் எப்போதும் நனைவான்.
விபத்துக்கள் ஏற்பட ஒருபோதும் இடமளியான்.
கதவுகள் இரண்டையும் விரைவில் மூடிவிடுவான்.

(1) கண் (2) வாய் (3) மூக்கு




16. உரு I இல் நிழற்றப்பட்டுள்ள கட்டங்கள் மாத்திரம் மறையக் கூடியவாறு உரு II இனை ஒட்டினால் கிடைக்கும் சதுரவலைக் கட்டத்தில் உள்ள கட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?




(1) **16** (2) **25** (3) **36**

17. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.



(1)  (2)  (3) 

18.  ஆகமெனில் வெறுமையான கட்டத்திற்குப் பொருத்தமான எண் யாது?

(1) **07** (2) **08** (3) **09**


19.  கடதாசித்துண்டு **A**

 கடதாசித்துண்டு **B**

கடதாசித்துண்டு A இல் இருக்கும் குறியீடு ★ மீது கடதாசித்துண்டு B இல் இருக்கும் குறியீடு ✡ இருக்குமாறு கடதாசித்துண்டு A மீது கடதாசித்துண்டு B ஐ வைக்கும் போது காணத்தக்க உரு யாது?

(1)  (2)  (3) 

20. விலங்குகள், பறவைகள், மைனா, முயல் ஆகியவற்றிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



 இன் மூலம் வகைகுறிக்கப்படுவது,

(1) முயல் (2) மைனா (3) பறவைகள்

[பக். 5 ஐப் பார்க்க.

www.lkedu.lk


21. பின்வரும் உருக்களில் முகம் பார்க்கும் கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரிவது,

(1) 

(2) 

(3) 

22. பின்வரும் உருவில் உள்ள எண்கோலத்திற்கேற்ப அடைப்பு [?] உடன் பொருந்தும் எண்ணைத் தெரிவு செய்க.





(1) **4**

(2) **6**

(3) **8**

23. ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களில் எழுத்துக்கள் ஒரு குறித்த விதத்தில் இருப்பதை உரு காட்டுகிறது. அதனை இனங்கண்டு அதேவிதத்தில் எழுத்துக்கள் அமைந்துள்ள பக்கங்களைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

24. மூன்று நண்பர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி குறியீட்டு முறையாக [**BEAT**], [**NEAT**] , [**SEAT**] என எழுதப்பட்டிருந்தன. இம்மூன்று நண்பர்களினதும் பெயர்கள் சரியாக எழுதப்பட்டுள்ள விடை யாது?

(1) பரதன், வரதன், கந்தன்
(2) அருணன், வருணன், கருணன்
(3) மகேசன், சபேசன், கணேசன்


25. ஒரு வினாவிடைப்போட்டியில் ஐந்து வினாக்கள் கேட்கப்பட்டன. முதலாம் வினாவிற்கு 1 புள்ளியும், இரண்டாம் வினாவிற்கு 2 புள்ளிகளும், மூன்றாம் வினாவிற்கு 3 புள்ளிகளும், நான்காம் வினாவிற்கு 4 புள்ளிகளும், ஐந்தாம் வினாவிற்கு 5 புள்ளிகளும் வழங்கப்பட்டன. ஒரு மாணவன் 13 புள்ளிகளைப் பெற்றானாயின் அவன் எத்தனையாம் வினாவிற்கு சரியாக பதிலளிக்கவில்லை?

(1) முதலாம் (2) இரண்டாம் (3) மூன்றாம்

26. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 24ம் திகதி என்ன நாளாகும்?


(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

27.



இவ்வுருவில் காணப்படும் தராசின் A, B ஆகிய தட்டுக்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறை ஒன்றுக்கொன்று சமம்.

இதற்கு ஏற்ப பின்வரும் தராசின் இரு பக்கங்களினதும் நிறைகளைச் சமன் செய்வதற்குத் தட்டு டீயில் வைக்கப்பட வேண்டிய பொருட்கள் யாவை?



(1) ●●

(2) ●●●

(3) ●●●●

[பக். 6 ஐப் பார்க்க.

www.ikeduk.lk


28. ஒரு மாணவன் **I** தொடக்கம் **XX** வரையிலான எண்களை ஒழுங்கு முறையில் உரோம எண்ணில் எழுதும் போது **I** எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?


(1) **28** (2) **29** (3) **30**

29. ஒரு பண்னையில் மாடுகளும் கோழிகளுமாக 15 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 46 ஆகும் எனின், அப்பண்னையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?


(1) **08** (2) **09** (3) **07**

30.





மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்களை அவதானித்து கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருட்களை வாங்கத் தேவையான பணத்தைக் காண்க.




(1) ரூபாய் 1200.00

(2) ரூபாய் 1500.00

(3) ரூபாய் 1800.00

31. தோட்டமொன்றில் காணப்பட்ட பழமரங்களின் எண்ணிக்கை பின்வரும் வரிப்படம் மூலம் தரப்பட்டுள்ளது.



அதிகம் > குறைவு
குறைவு < அதிகம்


இங்குள்ள தரவுகளின் அடிப்படையில் இந்த தோட்டத்தில் மிக அதிகமாக காணப்படும் மரம் யாது?

(1) மாமரம்

(2) பலா மரம்

(3) வாழை மரம்

32. அருகில் தரப்பட்டுள்ள திண்மத்தில் காணப்படும் மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?



(1) **6**

(2) **8**

(3) **10**

33. கிராமத்துப் பெண்கள் தங்களது குழந்தைகளை உறங்க வைப்பதற்காக பல பாடல்கள் பாடுவது வழக்கம். அவை 1..... என்று அழைக்கப்படும்.
இப் பாடல்கள் 2..... மிக்கவை. இந்த இசையை அனுபவித்த வண்ணம் குழந்தைகள் உறங்குகின்றன.

மேலே பந்தியில் 1,2 ஆகிய இடங்களில் வரவேண்டிய பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.


(1) ஒப்பாரிப் பாடல்கள், கவிநயம்

(2) தாலாட்டுப் பாடல்கள், இசைநயம்

(3) கவிதை, தாளலயம்

www.lkedu.lk

[பக். 7 ஐப் பார்க்க.

34. 


அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

(1) **06** (2) **08** (3) **10**

35. **c**, **b**, **o** எனும் மூன்று ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் பிடிக்கும் போது அவற்றில் ஓரெழுத்து வேறொரு ஆங்கில எழுத்தாகத் தெரியும் அவ்வெழுத்து யாது?


(1) **c** (2) **b** (3) **o**

36. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பெறுவதற்கு இணைக்க வேண்டிய இரு உருக்களும் யாவை?




(1) (2) (3)

37. ஒரு நிகழ்வின் ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்குவரிசை மாற்றப்பட்டு A, B, C, D, E எனத் தரப்பட்டுள்ளது. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சியின் சரியான ஒழுங்குவரிசை இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



1) ACBDE 2) ADBCE 3) ADCBE

38. கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பாருங்கள்.



இந்த மூன்று உருத்துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக்கூடிய தனி உரு யாது?



(1) (2) (3)

[பக். 8 ஐப் பார்க்க.

39.

$$4 \blacklozenge 2 = 4 \blacktriangle 2$$

மேலே தரப்பட்டுள்ள அடைப்பினுள் உள்ள கணிதத் தொடர்புடைமையில் ◆, ▲ எனும் குறியீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?

(1) + உம், x உம் (2) + உம், உம் ÷ (3) ÷ உம், - உம்

40. கீழே தரப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெறுமையாக உள்ள அடைப்பினுள் வரவேண்டிய எண் யாது?

123 ⇒ 234 ⇒ 345 ⇒ ? ⇒ 567

(1) 456 (2) 468 (3) 678

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 2 - O/L
Medium
TAMIL / ENGLISH

ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call:
76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை

முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ARM.SIMAAS

SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY

EXAMINATION GRADE FOUR STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES , MODEL - 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் நான்கு மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2021

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் **உமது சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்க.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	

மொத்தப் புள்ளிகள்

இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	
	V/I/T/CH

www.ikeou.lk

[பக். 2 ஐப் பார்க்க

● **01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. **இலவசக் கல்வியின் தந்தை** என அழைக்கப்படுபவர்,

(1) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி
(2) கலாநிதி. ரீ. பி. ஜாயா
(3) கலாநிதி. சி. டபள்யு. டபள்யு. கன்னங்கரா

02. கால்களை உடைய விலங்குகள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது?

(1) நாய், மண்புழு, கொக்கு (2) பூனை, பாம்பு. கோழி (3) கிளி, தாரா, ஆமை

03. வெளவாலினால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மை,

(1) இரவு நேரத்தில் நடமாடுதல் (2) ஒலியை எழப்புதல் (3) விதைகளைப் பரவச் செய்தல்

04. நீராவியில் அவிப்பதனால் தயாரிக்கப்படும் உணவு வகை எது?

(1) அப்பம் (2) இடியப்பம் (3) ரொட்டி

05. நூல்நிலையம் ஒன்றில் செய்யக்கூடாத செயல் யாது?

(1) சத்தமிடாமல் புத்தகங்களை வாசித்தல்.
(2) வாசிக்கும் புத்தகங்களை குறித்த இடத்தில் வைத்தல்.
(3) வாசிக்கும் பத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடல்.

06. பின்வரும் உணவு வகைகளில் உடலுக்கு சக்தியை வழங்குவதற்குத் தேவையான உணவு எது?

(1) சோறு (2) பயற்றங்காய் (3) வல்லாரை

07. தானியப் பயிர் வகையான பருப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உணவு,

(1) வற்றாளை (2) பயறு (3) பூசணிக்காய்

08. **பல்லாங்குழி** என்பது,

(1) மருந்துகள் தயாரிக்கும் முறைகளில் ஒன்று.
(2) கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
(3) தொடர்பாடல் முறைகளில் ஒன்று.

09. தூர நோக்கற்ற மனிதனின் செயற்பாடுகளினால் அனர்த்தம் நிகழக்கூடிய சந்தர்ப்பம்,

(1) மின்னல் தாக்கம் காரணமாகப் பயிர்ச்செய்கை அழிவடைதல்.
(2) சூறாவளிக்காற்று வீசும் போது வீடுகள் உடைந்து விழுதல்.
(3) மலைப் பகுதிகளில் உள்ள மண்ணை அகழ்வதனால் மண்சரிவு ஏற்படல்.

10. நாங்கள் உணவுக்காகப் பயன்படுத்தும் மலர்வகையைக் காட்டும் உரு எது?

(1) 

(2) 

(3) 

11. வயல்களில் உள்ள தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை இரையாகக் கொள்ளும் பிராணி எது?

(1) ஆந்தை (2) நத்தை (3) மண்புழு

[பக். 3 ஐப் பார்க்க

www.lkedu.lk

சுட்டெண் :.....

12. அரச இலச்சினையில் உள்ள குறியீடுகளில் **அடங்காதது** எது?

(1) மலரிதழ்கள் (2) அரச இலைகள் (3) நிறைகுடம்

13. இலங்கையின் தேசிய விளையாட்டின் ஒரு அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

(1) ஆறு (2) ஏழு (3) எட்டு

14. பல்லியின் முட்டையின் நிறம் யாது?

(1) மஞ்சள் (2) இளநீலம் (3) வெள்ளை


15. நீரை சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயணப் பொருள் யாது?

(1) குளோரின் (2) அயடின் (3) மஞ்சள்

16. பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?

(1) தொண்டைக்கரப்பான் (2) கண்டமாலை (3) யானைக்கால்

17. நீரைக் கொண்டுள்ள வெவ்வேறு வடிவமுடைய பாத்திரங்களைக் காட்டும் இவ்வுருவை நன்கு அவதானியுங்கள். இதன் மூலம் நீரின் **எவ்வியல்பு** குறித்து அறிந்து கொள்ளலாம்?



(1) நீருக்குக் குறித்த வடிவம் இல்லை.
(2) நீர் வழிந்தோடக்கூடிய தன்மை கொண்டது.
(3) தூய நீருக்கு மணமில்லை.

18. மயக்கமுற்ற நோயாளி ஒருவருக்குச் செய்ய வேண்டிய சரியான முதலுதவியாக அமைவது,

(1) சிறிதளவு நீரைத் தெளித்தலும், அருந்துவதற்குக் கொடுத்தலும்.
(2) ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்பட விசுறுதல்
(3) வைத்திய ஆலோசனைகளின்றி மருந்து வில்லைகள் வழங்குதல்.

19. மீனவர்கள் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கும் பெயர் யாது?

(1) நாம்புவ (2) அத்தாங்கு (3) மடி

20. பின்வருவனவற்றுள் இலங்கையின் தேசியத்துடன் **தொடர்பற்றது** எது?

(1) நீலோற்பலம் (2) நாகமரம் (3) நிறைகலசம்

21. பின்வரும் பிராணிகளின் தொகுதிகளில் ஊர்வனவற்றை மாத்திரம் கொண்டமைந்த தொகுதி யாது?

(1) தவளை, பல்லி (2) உடும்பு, பாம்பு (3) முள்ளம்பன்றி, தவளை

22. பருகுவதற்காகப் பால் பைக்கற்றினை திறப்பதற்கு முன்பாக பைக்கற்றில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது,

(1) உற்பத்தித் திகதி (2) பொதிசெய்த திகதி (3) காலாவதியாகும் திகதி

23. எலுமிச்சம்பழச்சாற்றில் அதிகளவில் காணப்படும் போசணைப் பதார்த்தம் யாது?

(1) விற்றமின் B (2) விற்றமின் C (3) விற்றமின் D

24. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டில் உள்ள நாய் உரத்துக் குரைக்கும்?

(1) தனது எல்லைக்குள்ளே வேறு நாய் வரும் போது
(2) நாய் கவலையை அல்லது தனிமையை உணரும் போது
(3) வெளியாட்கள் வீட்டிற்கு வரும் போது

www.kedu.lk

[பக். 4 ஐப் பார்க்க

25. கஞ்சி தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இலை வகையாக **அமையாதது,**


(1) சிறுநாரத்தை இலை (2) வட்டுக்கத்தரி இலை (3) கோப்பை இலை

26. உப்புத்தூளானது விரைவாகக் கரைவது,

(1) வெந்நீரில் (2) குளிர்நீரில் (3) தண்ணீரில்

27. இலங்கையில் போக்குவரத்திற்கு எனப் பயன்படுத்தப்படும் பொது வாகனங்கள் இரண்டு,

(1) லொறி, கார் (2) புகையிரதம், பேருந்து (3) வான், கார்


28.  அருகில் தரப்பட்டுள்ள இந்த அழகிய வாழிடத்தை அமைக்கும் பிராணி எது?

(1) மழைக்குருவி

(2) மஞ்சட்குருவி

(3) தூக்கணாங்குருவி

29. **மின்னல் தாக்கம் நிகழக் கூடும்** என்பதற்காகப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு யாது?



(1) (2) (3)

30. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் நான்காம் படிமுறையாக அமைவது யாது?

(1) மனவுறுதி (2) பிரார்த்தணை (3) உதிப்பு

- **பின்வரும் பந்தியை வாசிக்க.**

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கை காட்சிகளைக் கொண்டது. பச்சைக்கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்கள், இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி, நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள், அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள், அக்காட்சிகளைப் பார்த்து, கனிகளை உண்டு, நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.

31. **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.**

(1) இங்கு கீதம் இசைத்து வருவது யாது? .....

(2) செயற்கை என்ற சொல்லின் எதிர்ச்சொல் யாது? .....

(3) பழங்கள் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. .....

(4) மரம் என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக. .....

(5) இங்கு இடம்பெறும் உவமைத் தொடரை எழுதுக. .....

(6) பந்தியில் வந்துள்ள தன்மை, ஒருமைச் சொல்லை எழுதுக. .....

32. **அடைப்பினுள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

(1) ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு , விலக்கு)

(2) மாணவர் தமது ..... களைச் சிறப்பாகச் செய்தனர். (பனி , பணி)

[பக். 5 ஐப் பார்க்க

www.ikeda.lk

33. (1) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

- பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன.....

(2) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.

- நடசத்திரம் வானில் மின்னுகின்றது .....

34. பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை .....

(2) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் .....

35. சேவல், மைனா என்ற இரு சொற்களிலும் சே, மை என்னும் எழுத்துக்களில் இடப்பட்டுள்ள உயிர்க் குறிகளின் பெயர்களை அடைப்புக்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(1) **சே** (ஒற்றைக் கொம்பு - இரட்டைக் கொம்பு - சங்கிலிக் கொம்பு).....

(2) **மை** (ஒற்றைக் கொம்பு - இரட்டைக் கொம்பு - சங்கிலிக் கொம்பு).....

36. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

ஐயோ முதலாளி அகப்பட்டாரா

- **கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 37 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடைகளை எழுதுக.**

கோகுலம் அரம்ப பாடசாலையின் மாணவனான இந்திரன் கெட்டிக்காரச் சிறுவன். 10 வயதுடைய அவன் தரம் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கின்றான். குடும்பத்தில் மூத்தவனான அவனுக்கு ஆனந்தி என்னும் சகோதரியும் ஆனந்தன் என்னும் சகோதரனும் உள்ளனர். சித்தார்த்தன் என்ற பெயருடைய அவனின் அப்பா ஒரு விவசாயி. மாலினி என்ற பெயருடைய அவனது அம்மா வீட்டு வேலைகள் செய்வதிலும் பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் முழு நாளையும் செலவழிப்பார்.

இப்பந்தியின் பிரதான நபர் பற்றிய விபரங்களைத் தரப்பட்டுள்ள அட்டைப் பத்திரத்தில் எழுத்துக்களால் எழுதி நிரப்புக.

அட்டைப் பத்திரம்

37. முழுப் பெயர்:.....

38. வயது:.....


39. தந்தையின் தொழில்:.....


40. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை:.....

41. கீழே தரப்பட்டுள்ள பாடலில் இடைவெளியில் வரவேண்டிய சொற்களை எழுதுக.

பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் ..... சென்றிடுவோம்.
வீதியொழுங்கைப் பேணி நிதம்
..... காத்திடுவோம்.

42. பின்வரும் உபகரணங்களால் காட்டப்படும் இசைக்கருவிகளின் பெயரைத் தெரிவு செய்து எழுதுக.

(1)  .....

(2)  .....

(3)  .....

எக்காளம்
நாதஸ்வரம்
மகுடி
கஞ்சிரா
புல்லாங்குழல்
தவண்டை

[பக். 6 ஐப் பார்க்க

www.tgedu.lk

43. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) காட்டாறு: ..... (2) நாளிதழ்: .....

44. கீழே தரப்பட்டுள்ள பெண்பாற் சொல்லுக்குரிய ஆண்பாற் சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

- பாங்கி :.....

45. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) காலை :..... (2) இரவு :.....

46. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.

- What is this? :.....

47. ஆப்பனசாலாவ என்னும் சிங்களச் சொல்லின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

.....


48. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

- මේ මකේ පුට්ටුව :.....

49. | 6 | 0 |
| --- | --- |
| 5 | 9 |

அருகே தரப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது?

:.....

50. 

உருவில் ஒரு விசுக்கோத்துப் பைக்கற்று காணப்படுகின்றது. அதன்,


(1) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

(2) சதுர வடிவ முகங்களின் எண்ணிக்கை யாது? .....

51. 9540 உடன் 805 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? .....

52. 6045 இலிருந்து 350 ஐக் கழிக்க. வித்தியாசம் யாது? .....

53. ஓர் ஆரம்பப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் ' காணப்படுகின்றன.



(1) வானிலும் முச்சக்கர வண்டியிலும் வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?

:.....

(2) வேறு விதங்களில் வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55 எனக் காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை உரிய நிரலில் குறித்து, நிரலை பேனாவினால் அல்லது பென்சிலால் நிழற்றுக.

54. A என்னும் பாத்திரத்தில் 2l 500ml நீர் உள்ளது. B என்னும் பாத்திரத்தில் 4l நீர் உள்ளது. இவ்விரு பாத்திரங்களிலுமுள்ள நீரின் அளவுகளுக்கிடையிலான வித்தியாசம் யாது?

: .....l .....ml

[பக். 7 ஐப் பார்க்க

www.lkedu.lk

55. வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப் படத்தில் உள்ள சிறிய சதுரங்கள் சமனானவையெனக் கொண்டு அதில் $\frac{1}{3}$ பங்கை **பென்சிலால் அல்லது பேனாவினால் நிழற்றுக.**




56. 420 மாமபழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

: .....

57. பின்வரும் எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.

4050, 4060, 4070, 4080, ..., ...

58. இக் கடிகாரத்தின் முகத்தை அவதானியுங்கள். மணித்தியாலக் கம்பிக்கும் நிமிடக் கம்பிக்கும் இடையேயுள்ள கோணம் அடுத்து எத்தனை நிமிடங்களுக்குப் பின்னர் செங்கோணமாக இருக்கும்?




: .....நிமிடங்கள்

(நேரம் 2.30 எனக் கொள்க.)


59. ஒரு நாடகத்திற்கான நுழைவுச்சீட்டுக்களை விற்பதன் மூலம் மோகன் சேகரித்த பணம் ரூபாய்.1525 ஆகும். கண்ணன் சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூபாய். 175 கூடியது. கமலா சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூபாய். 175 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த மொத்தப் பணம் யாது?

: .....ரூபாய்


60. உருவில் காணப்படும் தகவல்களுக்கேற்ப வெற்றிடங்களை நிரப்புக.



1kg 750g



3kg 250g



.....kg .....g

61. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடங்களில் நூல் நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் தங்கியிருந்து மீண்டும் வீட்டிற்குச் சென்றாள்.

(1) கீதா நூல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்?

பிற்பகல் .....

(2) கீதா நூல் நிலையத்திலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணிநேரக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

..... : .....

www.lkedu.lk

62. நல்ல மனிதர்கள் வாழும் நாட்டின் மதிப்பு உலகின் எல்லாத் திசைகளிலும் பரவுகின்றது. "**நல்ல மனிதர்களிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கவழக்கங்கள்**"எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -

zoom
வகுப்புக்கள்

தரம் 5

பிரிவு 1

மாதம்
1500/=

திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு

நுண்ணறிவு | தமிழ் | கணிதம் | நுண்ணறிவு | சுற்றாடல் | சிங்களம் | ஆங்கிலம்

காலை 5.00 – 6.00

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call:
76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை